**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.R.சுஜாதா, பி.எஸ்.சி., எல்.எல்.எம்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**2057 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13 ம் நாள்**

**அ.வ.எண்.169/2019**

**TNCB-13000312-2019**

1) R. சுதர்சன்

2) R. ஜெயந்தி ... வாதிகள்

/எதிர்/

1) மணிமேகலை

2) நித்யா ப்ரியா ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, கடந்த 03.06.2019 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 07.06.2019 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, 18.03.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. மகாதேவன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**தீர்ப்புரை**

தாவா சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 09.05.2016 ம் தேதியன்று எழுதி பொள்ளாச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் 3900/2016 எண்ணாக பதிவாகியுள்ள தாவா பொது அதிகார ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று

விளம்புகை பரிகாரம் கேட்டும் தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதியாவது அவரது ஆட்கள் உள்ளிட்டவர்களாவது எக்காலத்திலும் எவ்விதத்திலும் வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்தாமல் இருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII, விதி 1-ன் படி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வழக்குரையின் சுருக்கம்**

தாவா 2ம் வாதி 1ம் வாதியின் தாயார். வாதிகள் மேற்படி பிரதிவாதிகள் பேரில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார்கள். வாதி தகப்பனார் ரமேஷ் அவர்களின் தந்தை வழிப்பாட்டனாரும், வாதி பாட்டனார் A.நடராஜ் அவர்களின் தகப்பனாருமான ஆறுமுகம் பிள்ளை அவர்கள் பெயரில் பொள்ளாச்சியிலுள்ள சொத்துக்களைத் தவிர, ஊத்துக்குளி கிராமத்தில் ஆறுமுகம் பிள்ளை பெயரிலும், அய்யம்மா பெயரிலும் இருந்த பூமிகளை விற்றது போக ஆறுமுகம் பிள்ளை பெயரில் பொள்ளாச்சி டவுனில் உள்ள சொத்துக்களைப் பொருத்து வாதி பாட்டனார் A.நடராஜ் அவர்களின் தகப்பனார் K.ஆறுமுகம் பிள்ளை அவர்களும், மனைவி அய்யம்மாள் அவர்களும், 1ம் வாதியின் பாட்டனார் A. நடராஜ் அவர்களும் கடந்த 10.06.1983 ம் தேதியன்று உரிய ஷரத்துக்கள் கண்டு ஒரு ஆர்பிட்ரேசன் அவார்டு எழுதி மேற்படி ஆர்பிட்ரேசன் அவார்டு திருப்பூர் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 13.06.1983 ம் தேதியன்று 1164/1983 எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2.2) மேற்படி ஆர்பிட்ரேசன் அவார்டில் சொத்துக்களை அனுபவித்துக் கொள்ளும் நிபந்தனைகள் குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆர்பிட்ரேசன் அவார்டில்

கண்ட சொத்துக்கள் பிராது "ஏ" ஷெட்யூலில் அயிட்டம் 1 முதல் 5 வரை விவரிக்கப்பட்டுள்ளன. மேற்படி ஆர்பிட்ரேசன் அவார்டில் விவரித்துள்ள நிபந்தனைகள் படி பொள்ளாச்சி டவுனில் ஆறுமுகம் பிள்ளை பெயரிலுள்ள சொத்துக்கள் அனைத்தையும் ஆறுமுகம் பிள்ளையோ, அய்யம்மாளோ, நடராஜோ அவர்களின் ஆயுள் பரியந்தம் எவ்வித வில்லங்க பாராதீனங்களுக்கும் உட்படுத்த உரிமையில்லாமல் மேற்படி ஆர்பிட்ரேசன் அவார்டில் கண்ட நிபந்தனைகளின்படி அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்று ஷரத்துக்கள் கண்டு மேற்படி ஆர்பிட்ரேசன் அவார்டு எழுதப்பட்டுள்ளது.

(2.3) மேற்படி ஆர்பிட்ரேசன் அவார்டில் கண்டுள்ள ஷரத்துக்களின் படி மேற்படி அவார்டில் கண்ட 2 வது அயிட்ட வீடு வகையறா சொத்துக்களில் A.நடராஜ் அவரது மனைவி ஜீவாவும் அவர்கள் ஆயுள் வரை எவ்வித வில்லங்க பாராதீனமும் செய்ய உரிமையில்லாமல் குடியிருந்து அனுபவித்து வந்து மேற்படியார் இருவரின் ஆயுளுக்குப் பின்னிட்டு மேற்படியார்களின் மகனான ரமேஷ் சொத்தினில் இருந்து வரும் வருமானத்தை மட்டும் வாதி பாட்டனாருக்கு அனுபவ பாத்தியம் மட்டுமே உண்டு என்றும், 5 வது அயிட்ட சொத்தை A.நடராஜ் அவர்கள் அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்றும். வில்லங்கம் செய்ய A.நடராஜ் அவர்களுக்கு உரிமையில்லை என்றும் A.நடராஜ் அவர்களின் ஆயுளுக்குப் பின்னிட்டு மேற்படியார்களின் மகன் ரமேஷ் வில்லங்கம் செய்யாமல் அனுபவித்து வந்து ரமேஷ் அவர்களின் ஆயுளுக்குப் பின்னிட்டு மேற்படி ரமேஷின் ஆண் வாரிசுகளுக்கு சமமாகவும், சர்வ சுதந்திரமாகவும் சேரத்தக்கது என்று விபரங்கள் கண்டும் மேற்படி ஆர்பிட்ரேசன் அவார்டு எழுதப்பட்டுள்ளது. வாதி தகப்பனாரும், 2 ம் வாதியின் கணவருமான ரமேஷ் அவர்கள் கடந்த 20.09.2014 ம் தேதியன்று இறந்து விட்டார்.

(2.4) A.நடராஜ் அவர்களுக்கு மேற்படி சொத்துக்களில் absolute right எதுவும் கிடையாது. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் கடந்த 01.09.1984 ம் தேதியிலும், அய்யம்மாள் அவர்கள் கடந்த 2003 ம் வருடத்திலும், ஜீவா(எ) ஜீவரத்தினம் அவர்கள் 17.05.2005 ம் தேதியிலும் இறந்து விட்டனர். பிராது "பி" ஷெட்யூலில் கண்ட சொத்துக்கள் வாதி தகப்பனாரும், 2 ம் வாதியின் கணவருமான ரமேஷ் அவர்கள் மைனராக இருந்த சமயம் ரமேஷ் அவர்களின் தாயார் ஸ்ரீமதி ஜீவா அவர்கள் மேற்படி ரமேஷ் அவர்களுக்கு கார்டியன் தாயாராக இருந்து மைனர் ரமேஷ் அவர்களின் பெயருக்கு கடந்த 18.03.1977 ம் தேதியன்று கிரயம் பெறப்பட்ட சொத்துக்களாகும். மைனர் ரமேஷ் அவர்கள் மேஜரான பின் பிராது "பி" ஷெட்யூலில் கண்ட சொத்துக்களை அவர் அனுபவித்து வந்து ரமேஷ் அவர்கள் வாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு அவர் கடந்த 20.09.2014 ம் தேதியன்று இறந்து விட்டார். அவர் இறந்த பின் மேற்படி ஆர்பிட்ரேசன் அவார்டு ஷரத்துக்கள் படி சொத்துக்களை வாதி அனுபவித்து வருகிறார். ரமேஷ் அவர்கள் இறந்த பின் பிராது "பி" ஷெட்யூலில் கண்ட சொத்துக்களை அவரது வாரிசுகளான 1ம் வாதியும் 2 ம் வாதியும் அடைந்து அனுபவித்து வருகிறார்கள். பிராது "பி" ஷெட்யூலில் கண்ட சொத்துக்கள் ரமேஷ் அவர்களின் தனிப்பட்ட சொத்துக்களாகும்.

(2.5) மேலும் 2 ம் பிரதிவாதி தாவாச் சொத்துக்களைப் பொருத்து 1ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 09.05.2016 ம் தேதியன்று ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதாக கூறி உயர்திரு கோயம்புத்தூர் முதன்மை கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் 2 ம் பிரதிவாதி இந்த தாவா வாதிகள் பேரிலும் 1ம் பிரதிவாதி பேரிலும் அசல் வழக்கு எண்.99/2017 ல் தாவா தொடர்ந்ததில் மேற்படி தாவா பிராதை Reject செய்யக் கோரி

வாதிகள் IA 842/2017 ல் மனு தாக்கல் செய்ததில் மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள விவரங்களைப் பொருத்து மேற்படி அசல் வழக்கு முழு விசாரணையின் மூலமே தீர்மானிக்க இயலும் என்று கூறி மேற்படி மனு கடந்த 06.04.2018 ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

(2.6) மேற்படி பொது அதிகார ஆவணம் பொள்ளாச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் 3900/2016 எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவாச் சொத்துக்களை பொருத்து எந்த ஒரு ஆவணமும் எழுதி வைக்க 2ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்துக்களில் எவ்வித பாத்தியமும், உரிமையும் கிடையாது. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி வைத்துள்ள தாவா பொது அதிகார ஆவணம் எவ்வகையிலும் செல்லத்தக்கதல்ல. மேற்படி பொது அதிகார ஆவணத்தில் உறவு முறைகள் உறவு தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி, வாதியின் தகப்பனாரும் 2ம் வாதியின் கணவருமான ரமேஷ் அவர்களின் சகோதரி என்றும், இறந்து போன வாதி தகப்பனார் மற்றும் 2ம் வாதியின் கணவருக்கு 1ம் பிரதிவாதியும், A.நடராஜ் அவர்களும் வாரிசுதாரர்கள் என்றும் கூறியிருப்பது சரியல்ல. காலம் சென்ற வாதியின் தகப்பனாரும், 2ம் வாதியின் கணவருமான ரமேஷ் அவர்களுக்கு வாதிகளாகிய வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். 1ம் பிரதிவாதியை மேற்படி A.நடராஜ் அவர்கள் சட்டத்திற்கு புறம்பாக வைப்பு நங்கையாக வைத்துக் கொண்டுள்ளார்.

(2.7) தாவா பொது அதிகார ஆவணத்தில் 2ம் பிரதிவாதி மேற்படி நடராஜ் அவர்கள் மீது பாகம், விளம்புகை, உறுத்துக்கட்டளை மற்றும் சுவாதீனம் ஆகிய பரிகாரங்கள் கோரி தக்க கோர்ட்டுகளில் பிராது தாக்கல் Arbitration வழக்கு தாக்கல் செய்து உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி பொது அதிகார ஆவணத்தில் நடராஜ் அவர்களும் ஒரு

சாட்சியாக இருந்து சாட்சிக் கையெழுத்தும் இன்னாரென்று நிரூபித்தவராகவும் கையெழுத்துக்கள் செய்து கொடுத்துள்ளார். மேற்படி ஆர்பிட்ரேசன் அவார்டில் கண்டுள்ள நிபந்தனைகள் விவரங்கள் அனைத்தும் மேற்படி நடராஜ் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தும் மேற்படி நடராஜ் அவர்கள் பிரதிவாதிகளுடன் கை சேர்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் உடந்தையாக இருந்து மேற்படி பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். மேற்படி பொது அதிகார ஆவணம் வாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது. மேற்படி பொது அதிகார ஆவணம் சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல.

(2.8) மேற்படி பொது அதிகார ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் பிராது "சி" ஷெட்யூலில் விவரிக்கப்பட்டுள்ளன. மேற்படி செல்லத்தகாத தாவா பொது அதிகார ஆவணத்தைக் கொண்டு 2 ம் பிரதிவாதிக்கு முகவராக இருந்து மேற்படி 01.07.1982 ம் தேதி in-operative ஆர்பிட்ரேசன் அவார்டு என்று விளம்புகை செய்ய வேண்டியும், தாவாச் சொத்தில் பாகம் மற்றும் பரிகாரங்கள் கோரியும் உண்மைக்கு புறம்பான காரணங்கள் கண்டு 1 ம் பிரதிவாதியால் உயர்திரு கோயம்புத்தூர் முதன்மை கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் இந்த தாவா வாதிகள் மற்றும் 5 பிரதிவாதிகள் பேரிலும் தொடர்ந்துள்ள அசல் வழக்கு எண்.99/2017 எவ்வகையிலும் நிலைக்கத்தக்கதல்ல. செல்லத்தக்கதல்ல. அவ்வாறு வழக்கு தாக்கல் செய்ய பிரதிவாதிகளுக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. மேற்படி தாவா உரிய விசாரணையின் பேரில் கடந்த 16.11.2021ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. மேற்படி செல்லத்தகாத தாவா பொது அதிகார ஆவணத்தைக் கொண்டு 1ம் பிரதிவாதி தாவாச் சொத்துக்களை வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்த எத்தனப்பட்டு

வருவதாக வாதிகளுக்கு உறவினர்கள் மூலம் தெரிய வருகிறது. அவரது செயல் சட்டத்திற்கும்,நியாயத்திற்கும் புறம்பான ஒன்றாகும். அதனால் வாதிகள் உரிய பரிகாரங்கள் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார்கள்.

**3) பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்**

2 ம் பிரதிவாதி முதல் பிரதிவாதி நலனில் 09.05.2016 அன்று, ஆவண எண் 3900/2016 மூலம் வழங்கிய முகவர் ஆவணம் (Power of Attorney) செல்லாது என்றும், அதனை அடிப்படையாக கொண்டு முதல் பிரதிவாதி அல்லது அவரின் சார்பிலுள்ளவர்கள் வழக்கு சொத்தை எந்த வகையிலும் பிணையப்படுத்தவோ அல்லது பரிவர்த்தனை செய்யவோ தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை முற்றிலும் பொய்யானது, அற்பமானது மற்றும் சட்டத்திலும் உண்மையிலும் நிலைநிறுத்த முடியாதது ஆகும். வாதிகள் வழக்குரையில் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தையும், இங்கு குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டவற்றைத் தவிர, போதுமான ஆதாரங்களால் வாதிகள் நிரூபிக்க வேண்டும்.

(3.2) பத்தி 3-ல் கூறியுள்ளபடி, முதல் பிரதிவாதியின் பெரிய தாத்தா Arumugam Pillai என்பவருக்கு Pollachi மற்றும் ஊத்துக்குளி கிராமங்களில் சொத்துகள் இருந்தது மற்றும் அவை அவரது மனைவி அய்யம்மாள் பெயரிலும் இருந்தது என்பது ஏற்கப்படுகிறது. மேலும், 10.06.1983 அன்று A. நடராஜ் உடன் நடைபெற்ற (Arbitration Award) மற்றும் அது 13.06.1983 அன்று திருப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாகும் என்பது மட்டும் ஏற்கப்படுகிறது. அந்த Arbitration Award-ல் 5 அட்டவணை (Schedules) சொத்துகள் உள்ளன என்பதும் மறுக்கப்படவில்லை.

(3.3) பத்தி 4-ல் கூறியுள்ளபடி, Arbitration Award-ன் படி ஆறுமுகம் பிள்ளை அய்யம்மாள் மற்றும் நடராஜ் ஆகியோருக்கு சொத்தை விற்பனை செய்ய உரிமை இல்லை என்றும், அனுபவ உரிமை மட்டும் உள்ளது என்றும் கூறப்படுவது வாதிகள் நிரூபிக்க வேண்டியதாகும். அதேபோல், 2ம் Award பற்றிய விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்படாத நிலையில், நடராஜ் மற்றும் அவரது மனைவி ஜீவா ஆகியோருக்கும் alienation உரிமை இல்லை என்பதும் நிரூபிக்கப்பட வேண்டும்.

(3.4) பத்தி 5-ல் கூறியுள்ளபடி, Award-ல் உள்ள விதிகளின்படி நடராஜ் அனுபவ உரிமை மட்டுமே பெற்றவர் என்றும், அவருக்கு alienation உரிமை இல்லை என்றும், அவரின் மறைவிற்கு பின் அவரது மகன் ரமேஷ் அனுபவிக்க வேண்டும் என்றும் பின்னர் ரமேஷ் ஆண் வாரிசுகள் முழு உரிமையுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறியிருப்பதை வாதியே நிரூபிக்கப்பட வேண்டும். ரமேஷ் 20.09.2014 அன்று இறந்தார் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். ஆனால் நடராஜ்-க்கு முழு உரிமை இல்லை என்பது முற்றிலும் பொய்யானது.

(3.5) ஆறுமுகப்பிள்ளை 01.09.1984 அன்று இறந்தார், அய்யம்மாள் 2003-ல் இறந்தார், ஜீவா (எ) ஜீவானந்தம் 17.05.2005 அன்று இறந்தார் என்பதும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பத்தி 6-ல் கூறியுள்ளபடி, B அட்டவணை சொத்து, ரமேஷ் சிறுவனாக இருந்தபோது அவரது தாய் ஜீவா 18.03.1977 அன்று guardian ஆக வாங்கியதாகவும், பின்னர் ரமேஷ் அதனை முழு உரிமையுடன் அனுபவித்ததாகவும், தற்போது வாதிகள் தனிச்சொத்தாக அனுபவிக்கிறார்கள் என்று கூறப்படுவதை வாதிகள் நிரூபிக்க வேண்டியது ஆகும். 09.05.2016 அன்று 2-ம் பிரதிவாதி முதல் பிரதிவாதி நலனில் Power of Attorney வழங்கியது மற்றும் அதனை

அடிப்படையாக கொண்டு O.S.No.99/2017 வழக்கு Coimbatore First Additional District Court-ல் தாக்கல் செய்யப்பட்டிருப்பது ஏற்கப்படுகிறது. அந்த Power of Attorney Pollachi Sub Registrar அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதும் ஏற்கப்படுகிறது. ஆனால் 2ம் பிரதிவாதிக்கு அந்த Power of Attorney வழங்க உரிமை இல்லை என்பது முற்றிலும் தவறானது. அதில் உறவுமுறை தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பது மறுக்கப்படுகிறது. பிரதிவாதிகள் மீது குற்றச்சாட்டு முன்வைப்பது அவதூறானது.

(3.6) பத்தி 9-ல் குறிப்பிடப்பட்டுள்ள O.S.No.99/2017 வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதும், நடராஜ் அந்த Power of Attorney-க்கு சாட்சியாக இருந்ததும் ஏற்கப்படுகிறது. அந்த Power of Attorney சட்டபூர்வமற்றது என்பது மறுக்கப்படுகிறது. அந்த வழக்கின் நிலைப்புத்தன்மை குறித்து தீர்மானிக்க வேண்டியது Coimbatore First Additional District Court மற்றும் அதன் மேல் முறையீட்டு நீதிமன்றங்களின் அதிகாரத்தில் உள்ளது. வாதிகள் நீதிமன்றத்திற்கு தூய்மையான கையுடன் வரவில்லை; பல முக்கியமான உண்மைகளை மறைத்து உள்ளனர். அவர்கள் Power of Attorney-ன் certified copy எவ்வாறு பெற்றனர் என்பதும் குறிப்பிடப்படவில்லை. சட்டப்படி, Power of Attorney-ன் certified copy principal அல்லது power agent மட்டுமே பெற முடியும்; எனவே மனுதாரர்கள் பெற்றிருக்கும் certified copy ஏற்றுக்கொள்ள முடியாதது.

(3.7) Arbitration Award-ல் உள்ள விதிகள் வாதிகளால் தவறாக விளக்கப்பட்டுள்ளன. Power of Attorney-ல் வழங்கப்பட்ட அதிகாரத்தின் நோக்கம் தெளிவாக உள்ளது. இவ்வழக்கு மூலம் பிரதிவாதிகளின் உரிமைகளை கட்டுப்படுத்த முயல்வது சட்டத்திற்கு புறம்பானது. மேலும், ரமேஷ் தனது தந்தை நடராஜ் உயிருடன்

இருக்கும் போதே இறந்ததால், அவருக்குப் பிந்தைய உரிமை முடிவடைந்து, நடராஜ் தான் முழு உரிமையாளர் ஆனார் என்பது Indian Succession Act, 1925 படி நிலைநிறுத்தப்பட்ட சட்டம் ஆகும். A அட்டவணை சொத்திலும் நடராஜ் முழு உரிமையாளர் ஆனார். இதனை அறிந்திருந்தும், வாதிகள் பிரதிவாதிகளின் உரிமைகளை பாதிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

**4)** வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதியின் எதிர் வழக்குரையின் சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கில் ஆய்வுக்காக கீழ்க்கண்ட எழு வினாக்கள் வனையப்பட்டுள்ளன.

5) வழக்கெழு வினாக்கள்:

| | |
|---|---|
| 1) | Whether the 1st plaintiff grandfather Nataraj become the absolute owner of the suit properties after the demise the 1st plaintiff father ramesh ? |
| 2) | Whether the 2nd defendant got right to execute the general power of attorney in favour of the 1st defendant in respect of the suit properties ? |
| 3) | Whether the plaintiff is entitled for the relief of declaration in respect of the general power of attorney deed dated 09.05.2016 ? |
| 4) | Whether the plaintiff is entitled, for the relief of permanent injunction as prayed for ? |
| 5) | To what other relief is entitled for ? |

6) இவ்வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்ததில் வாதி தரப்பில் 1ம் வாதி சுதர்சன் **வா.சா.1** ஆக விசாரணை செய்யப்பட்டு, **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ. 13** வரையான

ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

7) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

8) **எழுவினாக்கள் 1 முதல் 4 -ற்கான தீர்வு**

வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்டுள்ள பரிகாரங்களை அவர்களது வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபித்துள்ளார்களா என்று பரிசீலிக்கையில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள Ex.A1 எனக் குறிக்கப்பட்ட 10.06.1983 தேதியிட்ட Arbitration Award-ஐ கவனமாக பரிசீலிக்கும் போது, அதில் தெளிவாக life interest (ஆயுள் அனுபவ உரிமை) மட்டுமே ஆறுமுகப்பிள்ளை, அய்யம்மாள் மற்றும் நடராஜ் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், alienation (வில்லங்கம்) செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் கண்டறியப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் இருந்து ஆறுமுகப்பிள்ளை, அய்யம்மாள் மற்றும் நடராஜ் ஆகியோருக்கு சொத்துக்களில் முழு உரிமையும் வழங்கப்படவில்லை என்பது தெரியவருகிறது.

(8.2) மேலும், அந்த Award-ன் படி நடராஜ் அவர்களுக்கு முழு உரிமை வழங்கப்படவில்லை; அவர் மற்றும் அவரது மனைவி வாழ்நாள் வரை அனுபவ உரிமை மட்டுமே பெற்றுள்ளார்கள். அவர்களின் மறைவிற்கு பின், ரமேஷ் மற்றும் பின்னர் அவரது ஆண் வாரிசுகளுக்கு சொத்து சேர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. இதனால், ரமேஷ் தனது தந்தை உயிருடன் இருக்கும் போது இறந்திருந்தாலும், அந்த Award-ல் குறிப்பிடப்பட்ட remainderman உரிமை அவரது வாரிசுகளுக்கு தொடர்கிறது. எனவே, நடராஜ் முழு உரிமையாளர் என்று கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பில் செய்த வாதத்தை

ஏற்கும்படி இல்லை என்பது மேற்படி ஆவணத்தில் இருந்து உறுதியாகிறது. மேற்படி பிரதிவாதி தரப்புகளின் வாதம் சட்டப்படி நிலைநிறுத்த முடியாது ஆகும். மேலும் மேற்கண்ட Arbitration Award-ன் அடிப்படையில், 2ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்துக்களில் எந்தவிதமான ownership அல்லது alienation உரிமையும் இல்லை என்பது தெளிவாகிறது. இந்நிலையில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்துள்ள பொது அதிகார ஆவணம் செல்லத்தக்கதா என்று பரிசீலிக்கையில் ஒரு நபர் தமக்கே உரிமை இல்லாத சொத்தில், மற்றொருவருக்கு அதிகாரம் வழங்க முடியாது என்பது நிலையான சட்டக் கோட்பாடு ஆகும். (Nemo dat quod non habet).

(8.3) இதனால், 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிய Power of Attorney முற்றிலும் சட்டவிரோதமானது. ஒரு ஆவணம் சட்டவிரோதமாக உருவாக்கப்பட்டு, அது வாதிகளின் உரிமையை பாதிக்கும் வகையில் இருந்தால், அந்த ஆவணத்தை செல்லாது என்று அறிவிக்க அவர்கள் உரிமை பெற்றவர்கள். இந்த வழக்கில், Power of Attorney ஆவணம் உரிமையில்லாத நபரால் உருவாக்கப்பட்டதோடு, வாதிகளின் உரிமையை பாதிக்கும் நோக்கத்துடன் உள்ளது. எனவே, அந்த Power of Attorney ஆவணம் void ab initio (ஆரம்பத்திலிருந்தே செல்லாது) என அறிவிக்கப்பட வேண்டியது ஆகும். வாதிகள் வழக்கு சொத்துக்களில் சட்டபூர்வமான உரிமை பெற்றவர்கள் என்பதும், பிரதிவாதிகள் சட்டவிரோதமாக தலையிட முயற்சி செய்கிறார்கள் என்பதும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாய்மொழி ஆவண சாட்சியங்களில் இருந்து வாதிகள் தரப்பு நிரூபிக்கப்பட்டுள்ளது.

(8.4) மேலும், செல்லத்தகாத Power of Attorney ஆவணத்தின் அடிப்படையில்

சொத்துக்களை வில்லங்கப்படுத்தும் அபாயம் உள்ளது என்பது வாதிகள் தரப்பில் இருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை வாதிகள் தரப்பை ஆட்சேபிக்கும் விதமாக பிரதிவாதிகள் அவர்களது தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் அளிக்காததில் இருந்தே வாதிகள் தரப்பு சங்கதிகளை இந்த பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதும் வாதிகள் தரப்பினை அவர்கள் மறுக்கவில்லை என்பதும் உறுதியாகிறது. எனவே மேலே விவாதித்த காரணங்களில் அடிப்படையில் வாதி அவரது தரப்பை வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்கண்ட எழுவினாக்களுக்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது-

9) <u>எழுவினா 5-ற்கான தீர்வு</u>

மேற்கண்ட 1முதல் 4 எழுவினாக்களுக்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ளதால் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>முடிவில்</u>, வழக்கு அனுமதிக்கப்பட்டு தாவா சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 09.05.2016ம் தேதியன்று எழுதி பொள்ளாச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் 3900/2016 எண்ணாக பதிவாகியுள்ள தாவா பொது அதிகார ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும் தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதியாவது அவரது ஆட்கள் உள்ளிட்டவர்களாவது எக்காலத்திலும் எவ்விதத்திலும் வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்தாமல் இருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை, என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAMACHANDRAN SUJATHA

Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.03.28 10:34:48 +0700

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.

**வாதி தரப்பு சாட்சிகள் :**

வா.சா.1. சுதர்சன் (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.06.1983 | ஆர்பிட்ரேசன் அவார்டு - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 09.05.2016 | 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 18.03.1977 | 1ம் வாதியின் கணவரும் 2ம் வாதியின் தகப்பனாருமான ரமேஷ் அவர்களின் பெயரிலான கிரயப் பத்திரம் - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 01.09.1984 | ஆறுமுகம் பிள்ளை இறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ) - நகல் |
| வா.சா.ஆ.5 | 17.05.2005 | ஜீவா (எ) ஜீவரத்தினம் இறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ) - நகல் |
| வா.சா.ஆ.6 | 20.09.2014 | 1ம் வாதியின் கணவரும் 2ம் வாதியின் தகப்பனாருமான ரமேஷ் அவர்களின் இறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ) - நகல் |
| வா.சா.ஆ.7 | 07.11.2014 | ரமேஷ் அவர்களின் வாரிசு சான்று (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.8 | 30.12.2014 | தாவா 6வது அயிட்ட சொத்தினைப் பொறுத்து வாதிகள் பெயருக்கு தனி வட்டாட்சியர் (நகர நிலவரித்திட்டம்) பொள்ளாச்சி அவர்களால் வழங்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு - நகல் |
| வா.சா.ஆ.9 | - | மாண்புமிகு கோவை 1வது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தின் அ.வ.எண்.99/2017 வாதிகளுக்கு சர்வான பிராது – சார்வு நகல் |
| வா.சா.ஆ.10 | 16.11.2021 | மாண்புமிகு கோவை 1வது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தின் அ.வ.எண்.99/2017 தாவாவின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.11 | 16.11.2021 | மாண்புமிகு கோவை 1வது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தின் அ.வ.எண்.99/2017 தாவாவின் தீர்ப்பு – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.12 | 06.04.2018 | மாண்புமிகு கோவை 1வது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தின் அ.வ.எண்.99/2017 தாவாவில் IA842/2017 மனுவில் வழங்கப்பட்ட Fair order – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.13 | 06.04.2018 | மாண்புமிகு கோவை 1வது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தின் அ.வ.எண்.99/2017 தாவாவில் IA842/2017 மனுவில் வழங்கப்பட்ட Final order – சான்றிட்ட நகல் |

RAMACHANDRAN SUJATHA

Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.03.28 10:34:54 +0700

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.

--------- ----------------------------------------------------------------------------------------------------

**அசல் / வரைவு தீர்ப்புரை**

அ.வ.எண். 169/2019

தேதி : 27.03.2026

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

--------------------------------------------------------------------------------------------------------------